மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாநில அரசு பல கட்டங்களில் வற்புறுத்தி வருகிறது. நாங்கள் வற்புறுத்துவது மட்டும் அல்ல. மத்திய சார்க்காரிடத்திலேயும் வற்புறுத்தினால் தான் விரைவில் நடத்த முடியும். சமீபத்தில் தமிழ்நாட்டிற்கு வந்திருந்த இரயில்வே அமைச்சர் அவர்களும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்து இருக்கிறார்கள்.

THIRU R. PONNAPPA NADAR : Is this Government aware of the fact that the Planning Commission has given the green signal for this scheme and that they have pointed out that it will be included in the next budget ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அப்படி ஒரு கருத்து எங்களுக்கும் தெரிந்து வருகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, கன்னியாகுமரி ஜில்லாவில் தான் இந்தியாவிலேயே இரயில்வே தொடர்பு இல்லாமல் இருக்கும் ஜில்லா. ஆகவே, இதற்காக பிரையாரிட்டி கொடுத்து இந்தத் திட்டத்தை உடனடியாக அமல் நடத்த வேண்டுமென்று அக்கறை கொண்டிருப்பதாகவும் ஆனால் தமிழக அரசு அதற்கு முதல் பிரையாரிட்டி கொடுக்கவில்லை என்ற கருத்து கூறப்படுகிறதே, அது உண்மையா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : எந்த அடிப்படையில் சொல்கிறார்கள் என்று புரியவில்லை. இது மத்திய அரசாங்கம் செய்ய வேண்டிய பணியாகும். நம்முடைய பணியெல்லாம் லேண்ட் அக்குவிசிஷன் செய்து கொடுப்பதாகும். அக்குவிசிஷன் கொடுப்பதிலே ஆட்சேபணை இல்லை. பல ஆண்டுகளாக வற்புறுத்தப்பட்டிருந்தாலும் நாங்கள் வந்ததற்குப்பிறகு தான் இப்படி வற்புறுத்தி நடவடிக்கை எடுத்திருக்கிறோம். சமீபத்தில் இரயில்வே அமைச்சரவர்கள் தெரிவித்ததாகச் சொல்லி பத்திரிகைகளில் படித்திருப்பீர்கள். திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொல்லியபடி ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் கருத்தையும் மத்திய அரசாங்கம் தெரிவித்து இருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, அதாவது மாநில அரசு ரெகமண்ட் செய்திருக்கும் திட்டங்களில் இதற்கு முதல் பிரையாரிட்டி கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : எல்லாம் கொடுத்து கதை முடிந்தபிறகு சொன்னால் என்ன பிரயோஜனம்.

மணியாச்சி இரயில் நிலையத்துக்கு மறு பெயர்

* 248 வினா.—திரு. எம். முத்தையா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மணியாச்சி இரயில்வே நிலையத்திற்கு தியாகி வாஞ்சிநாத ஐயர் நினைவாக அவர்

பெயரை வைக்கவேண்டி மத்திய சர்க்காருக்கு மாநில சர்க்கார் பரிந்துரை செய்துள்ளதா?

(இ) இல்லையெனில், அவர் பெயரால் வேறு ஏதேனும் நினைவுச் சின்னம் எழுப்பும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசிலனை யிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) இல்லை.

Subsidy for cotton growers

* 249 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether subsidies are given to the cotton growers growing long staple cotton in the State; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) தீவிர பருத்தி அபிவிருத்தி திட்டத்தின்கீழ் இழை நீள முள்ள பருத்திவகைகளான எம்.சி.யு. 4., எம்.சி.யு. 5 சுஜாதா பருத்தி பயிர் செய்ய விவசாயிகளுக்கு கீழ் கொடுக்கப்பட்டுள்ள விகிதங்களில் மான்யம் வழங்கப்படுகிறது.

(1) பூச்சி மருந்துகளுக்கு—25 சதவிகிதம் முதல் மூன்று ரவுண்டுகள் மருந்து தெளிப்புகளுக்கு 33-1/3 சதவிகிதம் பின்னர் வரும் மருந்து தெளிப்புகளுக்கு.

(2) களைக் கொல்லி மருந்துகளுக்கு—33-1/3 சதவிகிதம்.

(3) விசைத் தெளிப்பான்களுக்கு—25 சதவிகிதம் ரூ. 200-க்கு மேற்படாமல் வழங்கப்படுகிறது.

(4) செயல்முறை விளக்கங்களுக்கு—அரை ஹெக்டேர் பாத்தி ஒன்றுக்கு தேவையான விதை, உரம், பூச்சி மருந்துகள் முதலிய பொருட்களுக்கு முழுவிலையாக ரூ. 200 மட்டும் கொடுக்கப் படுகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இன்றும் கூட பட இந்தியா விலும், வெளிநாட்டிலும் இருந்துதான் தமிழகத்திற்கு லாங் ஸ்டேபிள் காட்டன் இறக்குமதி செய்யப்பட வேண்டியிருக்கிறது. இம்மாதிரியான பருத்தியானது தேனி பகுதியிலும், திண்டுக்கல் பகுதியிலும், திருப்பூர் பகுதியிலும், ராஜபாளையம் பகுதியிலும் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தப் பகுதியில் இருக் கக்கூடிய விவசாயிகளுக்கும் இந்த வசதிகள், உதவிகள் கொடுக்கப் படுமா? அப்படிக் கொடுக்கப்படுமானல் எந்த அளவுக்கு இப்போது உற்பத்தி அதிகமாக இருக்கிறது ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தீவிர சாகுபடித் திட்டத்தின்கீழ் கோவை மாவட்டத்தில் 1,50,000 ஏக்கருக்கும் நெல்லை மாவட்டத்தில் 50,000 ஏக்கருக்கும் பூச்சி மருந்து தெளிக்க